padippakam



# காக்கும் நிலைக்கு உயிராகி...

பசீர் கவிதைகள்

படிப்பகம்

padippakam

பொதுமை வெளியீடு :

SILVA LIBRARY
SERIEL No.

காக்கும் நிலைக்கு உயிராகி

(பசீர் கவிதைகள்)

படிப்பகம்

padippakam

காக்கும் நிலைக்கு உயிராகி............
பசீர் கவிதைகள்
*KAKKUM NILAIKU UYIRAKI*
*(Collection of poems by Bazeer)*



முகமது தாவூத் பசீர் உசேன்
*MUHAMED TAWOOD*
*BAZEER USAIN*

முதற்பதிப்பு:- 1988-08-16

பொதுமை வெளியீடு:
(C) வெளியீட்டுக்குழு:

ஈழப்புரட்சி அமைப்பு (EROS)

39, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
39, TEMPLE ROAD,
JAFFNA.

நன்றி :
இந்நூல் வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும்

விலை: *Rs:* 15/-

படிப்பகம்

padippakam

000118

"ஈழப்போராட்டத்தின் பெயரால்
இதுவரை இழந்த அனைத்து
உயிர்களுக்கும் இப்படைப்பு"

படிப்பகம்

padippakam

000118

கலை, இலக்கியம் காலத்தை-வாழ்க்கையை வாழும் மனிதரை-அடையாளப்படுத்துகிறது இயங்கு சக்தியின் நுண்ணியதான செயற் பாடுகளைக்கண்டறிகிறது. கலை, இலக்கியத் தில் கவிதை நுண்ணிய செயற்பாடுகளை வெளிப்படுத்துவதில் முதன்மை வகிக்கிறது. தமிழில் ஈழத்து இலக்கியம் முதன்மை பெற் றதற்கும் கவிதை செழுமை பெற்றதற்கும் அனுபவங்கள் அடிப்படையாகின்றன. ஈழத்துக்கவிஞர்கள் குறிப்பிடுவதுபோல்தமிழ் பேசும் மக்கள் மரணத்துள் வாழ்ந்தார்கள். உயிரென்பது பெறுமானமிழந்து மரண பய மற்று அவர்கள் அனுபவித்த வாழ்க்கை ஈழத்து இலக்கியமாய் பரிமாணம் பெற்றது.

அடக்குமுறைச் சட்டங்களும், அரசபயங்கர வாதமும் மக்களை இறுகமூடியிருந்தபோதும், படைப்பாளிகள்தங்கள் படைப்புக்களை மக்கள் முன்வைக்கத் தவறவேயில்லை. அச்சகங்கள் கண்காணிப்புக் குள்ளாக்கப்பட்டிருந்த போதும், தாள்கள் தட்டுப்பாடாகவும் விலை அதிகரிப்பாக இருந்தபோதும், 83ம் ஆண் டிற்குப் பின்னுலான வெளியீடுகள் எவ் வகையிலேனும் வெளிவந்த வண்ணமாகவே இருந்தன. குறிப்பாகக் கவிதைகள் மிக அதிக அளவில் வெளிவந்தன.

கவிதைகளில் அழகியல் சிறந்து காணப் படாதபோதும் அவர்கள் சொன்ன செய்திகள் படிப்பவர்களின் உணர்வுகளை உசுப்பிவிடவே

உங்களுடன்

படிப்பகம்

padippakam

செய்தன. பதிப்பிக்கப்பெற்ற கவிதைகளை விடவும் நாட்குறிப்புகளிலும் கைப்பிரதியாகவும் ஏராளமானகவிதைகள் இன்னும் தேங்கிக்கிடக்கின்றன.

எமது மூத்த இலக்கிய வாதிகளும், பதிப்பக வசதி கொண்டோரும் இன்னும் அவைகள் மீது தம் கடைக்கண் பார்வையைச் செலுத்தாதது வேதனைக்குரியதாகும்.

ஈழத்து நிகழ்வுகளை இவர்கள் கனவுகளாக மறந்துவிடவே விரும்புகிறார்கள். அந்த நிகழ்வுகளைப் பதியப் பெற்ற இலக்கியங்களை வெறும் ஓலங்களென ஒதுக்கிவிடத் துணிகிறார்கள். ஆனால் இவ்ஓலங்களில் பதியப் பெற்றவை. ஒரு மானிடக் கூட்டத்தின் வாழ்க்கை - அவர்கள் வாழ்ந்த காலத்தின் அடையாளம் - வதையின் கதையென்பதை மறந்து விடுகின்றார்கள்.

நம் நாட்டார் பாடல்களில் நாம் அதிகம் கேட்பது ஓலங்களும், அவலக் குரலும், ஒப்பாரியும் ஆகும். நாம் அவற்றில் நம் மூதாதையரின் வாழ்க்கைக் கதையைத் தெரிந்து கொள்ளவில்லையா? அவ்வகையிலேயே பசீர் என்னும் கவிஞனின் ''காக்கும் நிலைக்கு உயிராகி ......'' என்னும் கவிதைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவனின் கவிதையில் வடிவ அமைப்பு குறைபாடுடையதாய் இருக்கலாம்; அழகியல் உணர்வு குன்றியிருக்கலாம்; ஆனாலும் இவை கவிதைகளே. அவன் தான் அனுபவித்ததை, தன் உணர்வுகளால் பதிந்தவற்றை தனக்குக் கை வந்த வடிவத்

உங்களுடன்



படிப்பகம்

padippakam

தில் இங்கே வெளிப்படுத்தியுள்ளான். இவனது இத்தொகுதியினை ஈழப்புரட்சி அமைப்பு வெளியிடுகிறது.

1982ல் ஈழத்துப் பல்வேறு கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ''இந்த மண்ணும் எங்கள் நாட்களும்'' என வெளியிட்டிருந்தோம். அன்றைய அரச நெருக்கடிகளும், சூழ்நிலையும் அத்தொகுதியினை பரவலாக விநியோகம் செய்ய முடியாமல் தடுத்து விட்டன. மீண்டும் 85ம் ஆண்டில் அத்தொகுதியினைப் புதுப்பித்து மீள்பதிப்புச் செய்ய முயற்சித்தோம்; அம்முயற்சியும் கை கூடாமல் போய்விட்டது. ஆனாலும் பசீரின் கவிதைத் தொகுதியை வெளியிடும் நாம் அடுத்து 77ம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையிலான காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ''எங்கள் மண்ணும் இந்த நாட்களும்'' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட இருக்கின்றோம்.

நாம் ஈழத்துக்கான கலை இலக்கிய பாரம்பரியமொன்றினை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதில் முழுமையான ஆர்வம் கொண்டுள்ளோம். இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் புதிய படைப்பாளர்களது படைப்புக்களை வெளியிடத் தயாராக இருக்கின்றோம்.

வெளியீட்டுக்குழு
ஈழப்புரட்சி அமைப்பு

உங்களுடன் 1988 - 08 - 16



படிப்பகம்

padippakam

இவன் எழுதுகோலை ஏந்தியிருப்பது பொழுது போக்குவதற்கல்ல. புனை கதை பேசிப் பிழைப்பு நடத்துவதற்கல்ல. எழுதுகோல் வரலாற்றை எழுதும் கோலாக இருக்கவேண்டும் என்ற உத்வேகத்தால் உற்சாகத்துடன் எழுதப் புறப்பட்டவன். அதனால் தான் இவனது படைப்புகள் எந்தப் பத்திரிகை அலுவலகத்தையும் நோக்கிப் படையெடுப்பு நடத்தியதில்லை. அச்சு வாகனத்தில் பவனி வராத போதும் இவனது படைப்புக்கள் பலருக்குப் பரீட்சயம் என்பது நிச்சயம். இவனது முகத்தை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

எனினும் இவன் உள்ளத்தில் குமுறும் எரிமலைக் குழம்புகளையும், சமூகத்தில் புரையோடிப் போன புண்களால் ஏற்பட்ட வலியைச் சுட்டும் விழிகளையும், அநீதிகளைத் துடைத்தெறிய ஆவேசமுடன் புறப்படும் கோப மூச்சுக்களையும் சுட்டிக்காட்டவேண்டிய தேவை இருக்கிறது. இவனது பாதங்கள் இலட்சியப் பாதையில் வீறு நடை போடும் வேளையில் விரல்கள் எழுதுகோலை ஏந்தியது, சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கே.

**உள்ளத்தின் அறிமுகம்**

படிப்பகம்

padippakam

இவனது படைப்புக்களில் இயற்கையின் எழில் இறகு கட்டிப் பறக்கிறது.

''சூரியன் சுடும்''
தென்றல் தீயணைக்கும்
மரங்கள் சிலிர்க்கும்

கடல் அலைகள்
கலவரக் காரணரை
கைது செய்ய
ஆர்ப்பரித்து அலையும்... என்ற வரிகளில் இயற்கை புது விளக்கம் பெறுகிறது. சிறீ லங்கா இராணுவம் ஈழப்பகுதிகளில் செய்த அநியாய அட்டூழியங்களைப் பதிவு செய்த இவனது பேனா?

அன்னையைக் கூட
அங்குல அங்குலமாகவும்
பழைய பானைகளின்
நுண் துகள்களையும் கூட
ஒவ்வொன்றாயும் சோதனைக்குள்ளாக்கி
அரச அடக்கு முறைக் கரங்கள்
வயோதிப தந்தையரின்
சில்லிடும் மயிர்க் கொம்புகளுக்குள்ளும்
'குண்டுகள்' தேடுகின்றன... என்று கோபமும், ஒருவித சோகமும் கிண்டலோடு வெளிப்படுத்தப்படுவது வெறுமனே வேதனையின் வெளிப்பாடல்ல. மக்களைக் காப்பாற்ற ஆயுதம் தாங்கிப் புறப்பட்டவர்களிடம் மனிதாபிமானம் மரணித்திருப்பதை,



படிப்பகம்

padippakam

'அரச ராணுவத்தின்
ராட்சத ரகளைகளினால் ரணம்பட்ட
நம் தாய்களின்
தாய்ப்பாலையே
தயிராய் உறைந்துவிடச் செய்யும் திறன்
நம் விடுதலை வீரர்களின் அதட்டலுக்குண்டு;
...என்று வெதும்புகிறான்.

நெருப்பை காணாத அடுப்புக்கு சொந்தக்காரர்கள்; நெஞ்சுக்குள் எரிமலையைப் புதைத்து கண்ணீரால் கழுவிக்கொள்பவர்கள்' என்பன போன்ற உதாரணங்கள்-சமூகத்தின் மீதான விமர்சனங்களாக மட்டுமன்றி உள்ளத்தைக் குடையும் அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தவல்லவை என்பதுதெளிவு.

கடந்த காலங்களில் கூட நடந்து வந்த தோழர்களை இழந்த போது அவன் எழுதியவை உற்சாகத்தை விதைப்பவையாக விரிந்தன. இவை வெற்று வேட்டுக்களால் அல்லது. அஞ்சலி ஓலங்களால் அழுது புலம்பாமல் எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கும் தெம்பைப் பிறப்பிக்கும் கருவூலங்களாக விளங்கின.

கரடு முரடான இலட்சியப் பாதையில் அடி பதித்த சம்பவங்களை-நினைவிற் பதிந்த சுவடுகளை படைப்புக்களாக்கிப் பகிர்ந்த இவன், மெல்லிய மன உணர்வுகளுக்கும் இடம் அளிப்பவன். குடும்ப பாசம், சகோதர உணர்வு, ஏன் காதல் கூட போராட்டத்திற்கு முன்னுரிமை அளிப்பதில் இருந்து பின்





படிப்பகம்

padippakam

வாங்க வைத்துவிடவில்லை என்பதற்கு அவன் வரிகள் சாட்சிகள் கூறும். அம்மா அவன் பார்வையில் அச்சடித்து வெளியிட்ட கருவியாகவே காணப்படுகின்றாள். எனினும் பாசம் கொப்புளிக்க ஏற்கனவே மிதிபட்டுப் புண்ணான உள்ளம் 'புரட்சி முன்னெடுப்பு என்ற மருந்தில்' தான் குணமடைந்து வருவதை உணர்த்துகிறான். 'குருதட்சணை'யில் இதிகாச காலத்தின் துரோணரும், ஏகலைவனும் புது விளக்கம் பெற்று புதுமனிதர்களாய் பவனி வருகின்றனர்.

இவ்வாறான இவனது வார்த்தைகளுக்கும் சொந்த வாழ்க்கைக்கும் இடையில் இடைவெளி ஏற்படவில்லை. எண்ணமும், எழுத்தும் ஒன்றுடன் ஒன்று ஐக்கியமாகி நிற்கும் இவனது படைப்புக்கள் வாசகர்களாகிய உங்கள் மனதில் நம்பிக்கை விதை விதைத்து, செயலுக்குத் தூண்டும் உணர்வுப் பயிரை வளர்ப்பதால், இவன் வெற்றி பெற்ற படைப்பாளி. சாதாரணமான கவிஞர்களைப்போல் காதல், கோபம், சோகம் என்ற உணர்வுகளைப் பிரதிபலிக்கும் புலம்பல்களை விடுத்து, தன் உண்மையான உணர்வுகளை இயல்பாகப் புலப்படுத்தும் ஆற்றல் மிக்க இந்தப் படைப்பாளியின் சாதாரணமான கடிதங்கள் கூட கவிதைகளாக விரிவது என் அனுபவம். இத்தகைய படைப்பாளிக்கு நான் அறிமுகம் செய்து முன்னுரை எழுதக் கிடைத்த சந்தர்ப்பம் என்னைப் பெருமைப் படுத்துவதாகும்.

– இளையவன் –

உள்ளத்தின் அறிமுகம்



படிப்பகம்

padippakam

## வார்த்தைகளால் அழிவது வாழ்வல்லவோ?

ஈழத்தின்
தென் பகுதியிலே
இரத்தக் களரி
ஒன்றிரண்டு
ஊர்களிலே
உரத்த ஒப்பாரி
பத்திரிகைகளில்
பாய் விரிக்கும்
செய்திக் கப்பல்கள்

ஆங்காங்கு
அறிக்கைகள்
அமர்ந்துகொண்டு அழும்



படிப்பகம்

padippakam

''குட்டிச்சுவர்கள்''
எச்சில் தடவப்பட்ட
எச்சரிக்கை
சுவரொட்டிகளை ஏந்தும்

அகதிப் பட்டதாரிகள்
அசுரகதியில்
பிறப்பெடுப்பர்

சமாதானச் சங்கு
அதிர்ச்சியில்
ஊமையாகி
ஏழைகளின்
இரைப்பைக்குள்
இடியைச் சேகரிக்கும்

ஏறுவூரில்
காசிநாதரும்
காசிம் வாவாவும்
கதைத்துக் கொள்வார்கள்
கல்முனையில் கலவரமாம்.....?

மருதமுனையில்
மருதமுத்தண்ணாவின்
வெற்றிலையில்
மகுமூது நானா
சுண்ணாம்பு தடவிக்கொண்டும்
மகுமூது நானாவின் முதுகில்
எட்டாத இடத்தை
மருதமுத்தண்ணா
எட்டிச் சொறிந்து கொண்டும்......



படிப்பகம்

padippakam

அங்கே
பிளவுகளை
நடவுசெய்த பூரிப்பில்
உழவு செய்ய வந்தோர்
இங்கெல்லாம் உறக்கத்தில்

இடைக்கால
ஓய்வின் மையத்தில்
துப்பாக்கிகள்
கோடாரிகள்
தற்காலிக அனுதைகளாகும்
''நாங்கள் பொறுப்பாளிகளல்ல,
வன்மையாகக் கண்டிக்கிறேம்.''

தடித்த எழுத்து
தலைப்புகளை
பத்திரிகைகள்
காறித் துப்பும்

கொழுத்தப்பட்ட
குடிசைகள்
'எகெட்,' 'றெட்பாணு' 'லயன்ஸ்'
நிவாரணங்களால்
நிமிர்த்தப்படும்.

புனருந்தாரண அமைச்சு
புழுத்து வழியும்
காப்புறுதி காரியாலயம்
கணிக்கும்
கனவான்கள்
மீண்டும் கனிவர்.



படிப்பகம்

padippakam

சூரியன் சுடும்
தென்றல் தீயணைக்கும்
மரங்கள் சிலிர்க்கும்
இலட்சியப் பஞ்சாயம்
இலட்சம் பரிசளிக்கும்
கடல் அலைகள்
கலவரக் காரணரை
கைது செய்து
ஆர்ப்பரித்து அலையும்
அவர்கள்
பாதிக்கப்பட்டோர் பட்டியலில்
பதுங்கிக் கொள்வர்.

குருதியில் தோய்ந்த
குடிசைகளில்
தீப்பந்தங்களை
உயிர்ப்பந்தங்களை
எரித்து விடவா செய்யும்......?

திட்ட அமுலாக்க
வெடி குண்டுகள்
உறவுப் பாலத்தை
தற்காலிகமாய்
தகர்த்து விடலாம்
கீழே......
ஓடும் நீரென்ன
உறைந்து விடவா செய்யும்.....?

காலில் இடறும்
சந்தேகச் செருப்புகளை
கழற்றி வீசிவிட்டு
வாருங்கள்
ஒற்றுமைக் குழந்தைகளை
கருத்தரிக்கும்
புதிய கருவறைகளைப் பிரசவிப்போம்.

படிப்பகம்

padippakam

## தூய காற்றுக்கே
## சுவாசிக்கக் காற்றில்லை

இருட்டை ஆடையாக அணிந்திருக்கும்
ஈழ தேசியமே!
உனக்கொரு சூரியன் படைக்க
எத்தனித்த இயக்கப் பிரம்மர்களின்
கைகளிலேயே இருட்டு!

நோயாளிகளை மறந்த வைத்தியர்கள்
கட்டிலுக்கு ஊசி ஏற்றிக்கொண்டிருக்கிருர்கள்

அவசரத்திலோ,
ஆத்திரத்திலோ,
மனிதர்களை
மறந்து விட்ட போராளிகள்.



படிப்பகம்

padippakam

ஈழ மாதாவே;
நீ, கொடுத்த தாய்ப்பாலையும்
மதுவாக மாற்ற
'மந்திரம்' ஓதுகிறார்கள்.

அன்பு ஆயுதத்தால்
தொட்டுப் பார்க்கவேண்டிய இதயத்தை
''இரும்பு துடைப்பங்களாலேயே''
துடைத்து விடுகிறார்கள்.

அவர்கள்;
துப்பாக்கி தூண்களாலான
நீதி மன்றங்களில் தீர்ப்பெழுதும்போது
தூய காற்றுக்கே சுவாசிக்கக் காற்றில்லை.

அந்நேரம்,
போர்த்துக் கொண்டிருக்கும் சூரியன்
ஈழ ஏழைகளின் குடிசைகளுக்குள்
இறங்கிவந்து
விளக்குகளின் வெளிச்சத்தை
விசாரித்துச் செல்கிறான்.

அன்னையைக் கூட;
அங்குலம், அங்குலமாயும்
பழைய பானைகளின்
நுண் துகள்களையும் கூட
ஒவ்வொன்றையும் சோதனைக்குள்ளாக்கி
அரச அடக்குமுறைக் கரங்கள்
வயோதிப தந்தையரின்



படிப்பகம்

padippakam

சில்லிடும் மயிர்க் கொம்புகளுக்குள்ளும்
'குண்டுகள்' தேடுகின்றன.

அரச ராணுவத்தின்
ராட்சத ரகளைகளால் ரணம்பட்ட
நம் தாய்களின்
தாய்ப்பாலையே
தயிராய் உறைந்துவிடச் செய்யும் திறன்
நம் விடுதலை வீரர்களின் அதட்டலுக்குண்டு

முனிவர்க்கே முற்றும்
கற்றுக்கொடுக்கும் உழைப்பாளிகளே
புரட்சிப் புற்றுக்குள் நுழைந்து
போராளிகளுக்கும் கொஞ்சம்
பாடம் நடத்துங்களேன்.

நெருப்பைக் காணாத அடுப்புக்கு
சொந்தக் காரர்களே!
நெஞ்சுக்குள் எரிமலையை
இன்னும் ஏன் கண்ணீரால்
கழுவிக் கொண்டிருக்கிறீர்கள்?

புரட்சியை
உற்பத்தி செய்கிறவர்களை
உற்பத்தி செய்கிறவர்களே!
மதிப்பிற்குரிய மக்களே!
ஈழ விடுதலை 'விறகுக்கு'
வேர்களைப் பொருத்தி
விருட்சம் வளர்க்க
விரைந்து வாருங்களேன்



படிப்பகம்

padippakam

# பொன் அம்பலத்திலே ஆடி

இது
இறந்து போன
தோழன் ஒருவனுக்கான
அஞ்சலியோ
விளம்பர அட்டையோ அல்ல
அவன்
கூரான போராட்ட முனையினால்
மக்களின் மனங்களைக் கீறி
புகுந்து கொண்டவன்
அவர்களின் நேச நெஞ்சங்களில்
புதைந்து போனவன்
இதனால் இவனைப்பற்றி
ஈழவர் எவருக்கும்
எடுத்துக் கூறத் தேவையில்லை.

வெற்று வேட்டுக்களாலும்
அஞ்சலி ஓலங்களாலும்
இவன் கொண்ட கொள்கையை
காணநினைத்த சமுதாயத்தை
கட்டி எழுப்பிவிட முடியாது
என்பதை உணர்கின்றோம்.
இன அடக்குமுறை, ஆக்கிரமிப்பு



படிப்பகம்

padippakam

ஈனச் சுரண்டல் போன்ற
இன்னோரன்ன ஆதிக்க வெறியர்களுக்கு
எதிரான விழிப்புணர்ச்சி வீரம்
ஈழத்து மூலைகளில்
இருளிலே ஒழிந்து கிடந்தபோது
விழிப்பு விளக்கின் வெளிச்சத்தை
தாங்கி இருள் அகற்ற முயன்ற
முன்னோடிகளில் ஒருவனை
இவனது செயல் வழியில்
நாங்களும் நம்பிக்கையுடன் நடக்கிறோம்.

பொன்னம்பலம் என்ற
புரட்சிப் போராளி
இறந்து விட்டானென்று
அரச கூலிப்படைகளின்
துப்பாக்கிகள் சாட்சி கூறின
உந்தன் பெயரைக் கேட்டு
உடம்பெல்லாம் நடுங்க
உதிரமெல்லாம் உறைந்தவர்கள்
உன்னைக் குறிபார்த்துச்சுடவோ
உன் உதிரத்தைச் சிந்தவைக்கவோ
முடியாது; என்று

வைத்தியசாலைச் சுற்றுச் சுவர்களும்
உன் உள்ளத்தைப் போலவே
உயர்ந்த அந்த உயரமான
நீர்த் தாட்டிக் கோபுரமும்
ஈழத்துச் சிறுவர்களை அணைத்துமகிழும்
உன் நேசக்கரங்கள் போலவே
கிளை பரப்பி, சலசலத்து



படிப்பகம்

padippakam
காற்ருேடு சல்லாபித்து மகிழும்
பரந்து நிமிர்ந்த பசிய மரமும்
சாட்சி சொல்லிக்கொண்டிருக்கின்றன.

எதிரிகள் எட்டிக் கொய்யமுடியாத
தூரத்தில் தானே பூத்திருந்தாய்
புரட்சிப் பூவே பொன்னு......
உன்னை அழித்துவிட்டதாக எண்ணி
எக்களித்து அவர்கள்
ஏமாந்து கிடக்கின்ருர்கள்
பாத்திரம் நிறைந்த நீர் கொதித்து
அடுப்புக்குள் கொட்டி
நெருப்பு அணைந்தது போல
ஈழவர் இன்னல் கண்டுகொதித்த
உன்குருதி சீறிப்பாய்ந்து
மானிடத்தின் வைரிகளை
அழிக்கும் என்பதை ஏண்ணுமலே

உன்குருதியின் கூர்மைகண்ட
சுவர்கள், கோபுரம், மரம் எல்லாமே
உரத்து உரைக்கின்றன
பொன்னுன உன்உடலைப் புதைத்தார்களா?
எரித்தார்களா? என்று
எங்களுக்குத் தெரியவில்லை... ஆனுல்
புதைப்பதாலோ, எரிப்பதாலோ,
பொன் அழிந்துவிடுவதில்லை என்று தெரியும்
உன் சிந்தனை - செயல் - வீரம்
எல்லாம் அம்பலத்தில் ஆடி
எங்களுக்கு வழிகாட்டுகின்றன.



படிப்பகம்

padippakam

## அவர்கள் பரிணமம்
## கண்டு வருகிருர்கள்......

அவர்களை
காலச்சட்டிக்குள் போட்டு
கரு( க ' வறுத்து
வறுமை வற்றலாக்க
காரணமாயிருந்த கனவான்களுக்கும்,
அதிகார வர்க்கத்திற்கும்,
புதுமை எச்சரிக்கை செய்கிருர்கள்.

நம் மூதாதையர் காலத்தில்
கிரேக்க நாட்டில்
முழு வளர்ச்சி பெறுவதற்கு முன்னரே
எல்லா மலைகளின் பசுமையையும்
நறுக்கித் தின்று
வெறிச்சோட வைத்தனவாம்
வெள்ளாடுகள்.

தற்காலத்தில்
'சூறையாடும் பொருளாதாரத்தில்'
உலகின் ஏராளமான
மனித மலைகளின்
வாழ்வுப் பசுமையைத்



படிப்பகம்

padippakam

தின்று தீர்த்து
நறுக்கிச் சேமித்த
நயவஞ்சகர்களே!
இதோ வருகிறார்கள்

ஆயுதம் ஏந்தியல்ல......
ஆயுதமாகவே
பரிணாமம் கண்டு வருகிறார்கள்.

பலவகை உணவின்
உறுதுணையின் காரணத்தால்
குருதியில் வேறுபட்ட
இரசாயனப் பொருட்கள் உருவதகி
உடலமைப்பு படிப்படியாக
வேறுபாடடைந்து

நாம் -
மனிதக் குரங்கிலிருந்து
மனிதனாக நிலைமாறுதல்
கண்டோம் என்கிறது
விஞ்ஞானம்.

உணவின்றி அவதிப்படுகிறார்கள்
மிதமாகக் கிடைக்கின்ற
மண்ணை - கல்லை
நெருப்பை - இரும்பை
இனிமேல் உண்ணப்போகிறார்கள்
ஊறப் போகும் சத்துக்கள்
வேறு இரசாயனப் பொருட்களை
உருவாக்கம் செய்யப்போகிறது
அந்நேரம் - அவர்கள்
மனிதனிலிருந்து



படிப்பகம்

padippakam

ஒரு - வித்தியாசமான
'ஆயுத ஜீவியாக' நிலை மாறலாம்;
இந்த நெருப்பு யுகத்தில்
நீங்களெல்லாம்
யாரைச் சரணடப் போகிறீர்கள்?
எவரை ஆளப்போகிறீர்கள்?
பீரங்கிப் பிறவிகளையா?

இதென்ன பிதற்றலென்று கூறுவீர்கள்.
குடையைக் கண்டு பிடித்தவனை
கல்லாலடித்தவர்கள் - அதை
தலைக்குமேலே தூக்கிவைக்கவில்லையா?

உங்களுக்குப் பாதகமாக
இல்லை......இல்லை
உங்கள் நடவடிக்கைகளுக்கு
நஞ்சாக பாட்டாளிகள்
உண்மை மனிதனைப்
பரிணமம் காண்பார்கள்
அவர்கள் வாயைத் திறந்தால்
பீரங்கி கனல் கக்கி வெடிக்கும்
உங்களுக்காக உழைத்த கரங்கள்
உயர்ந்தால் துப்பாக்கியாய்ச் சீறும்
கண்களை விழித்துமூட -
காரியக் கண்ணிகள் கிளம்பும்
கழிப்பதெல்லாம் ''ரவை''களாக
ராட்சத உருப்பெறும்.
அவர்களைத் தொட்டுக்கொள்ளவே
நீங்கள் அஞ்சவேண்டி இருக்கும்

இக்காலத்தில் அவர்கள்
பயந்து ஓடும் உங்களை
துரத்திவந்து கட்டிப்பிடித்து
பொதுமை வறுவல் போடுவார்கள்

படிப்பகம்

padippakam

## வெளிச்சத்துக்கு வருவோம்

சோசலிச
கொழு கொம்பு கொண்டு
மனித மரங்களில்
இன்னும் ஒட்டிக்கிடக்கும்
வறுமை அழுகல்
பழங்களைக் கொய்து
சிக்கலுக்குச் சிக்கெடுப்போம்

ஊர் நோக்கி
ஏவல் ராணுவத்தார்
ஊர்ந்துவர நாங்களெல்லாம்
நம்பிக்கை ஆயுதத்தோடு
முன்னே நகர்ந்துவிட



படிப்பகம்

padippakam

அங்கே மனித உருவில் மட்டும்
காட்சிதரக் கொஞ்சம்
சோம்பேறிகள் இருந்துவிட்டுப் போகட்டும்.

ஈழத்தின் இலங்கு விடியலில்
பீறிட்டுப்பாயும் ஒளிக்கற்றைகளில்
சிலவற்றை ஒழித்துவைத்து
பக்கத்து நாட்டுக்கும் பாய்ச்சுதற்கு
பகுத்தறிவு ஊசிகள் பயன்படலாம்

ஈழத்து சூரியனைச் சுற்றியுள்ள
அடக்குமுறைக் கிரகணத்தை
தத்துவ நெம்புகோல் கொண்டு
புரட்டித் தள்ளிவிட்டு
சுத்தமான சூரியனைப் பொருத்திக்கொண்டு
நாங்களும் வெளிச்சத்துக்கு வருவோம்.

வித்தியாசமாக வெடிக்கும்
ஒரு 'நியூற்றனேடு'
கூடவே வீசும்
பகுத்தறிவுக் காற்று
மூடநம்பிக்கைகள் அனைத்தையும்
இந்து சமுத்திரத்தில்கூட வைத்து
ஆலோசிக்க நேரமில்லாமலே
அமிழ்ந்துவிடச் செய்யும்

சாதி - மதம்
பிரதேசவாதம்
இனம் - மொழி



படிப்பகம்

padippakam

சீதனம் - அநீதி
சுரண்டல் போன்ற
திமிங்கிலங்களை
கருத்துப்பற்றிக்கொண்ட
மக்கள் 'நெத்தலிகள்'
கூட்டமாக நின்று
உடைத்துண்டு விடுகின்ற
விடுதலை - வெப்ப ஏப்பத்தில்
முதலாளிகளின் ஆதிக்க நீர்மூழ்கி
அவிந்து நாறிப்போகும்.

மதங்கொண்ட அரக்கர்களை கட்டிப்போட
பொதுவுடமைச் சங்கிலி கோர்க்கிறோம்
தண்டனைபற்றித் தீர்மானிக்க
தாடிக்காரன் வரவேண்டும்
அவனுக்கு மட்டுமாவது
அடுத்த ஜென்மம் பலிக்கட்டும்...?

சனங்களின் விழிப்பு அடர்த்திகண்டு
சரணடைய இருக்கின்ற சாமிகளுக்கு
ஒரு தோரணம் போடுகிறோம்
அவர்களின் வேசங் கலைத்து வரவேற்க
மௌனக் கேள்விகள் காத்திருக்கின்றன.

புதிதாய் புலரும் பொழுதினிலே
புரட்சிக்காய் சிந்திய இரத்தமெல்லாம்
எஞ்சியோரின் என்பு மச்சைகளுக்குள்
மீண்டும் புகுந்து கொண்டு
புன்சிரிப்பை உதிர்க்கும்.



படிப்பகம்

padippakam

## 1986 - 10 - 27 ஒரு நாளன்று

இன்று
உலக சமாதான தினம்
போப் பாண்டவர் வேண்டுகிறார்;
உலகே !
யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடி!

அவர் கேட்பது
ஏய்! ஆயுதங்களே
முழங்க வேண்டாம்
அதனால்
ஆட்களைக் கொல்லவேண்டாம்.



படிப்பகம்

padippakam

நேற்று - இன்று - நாளை
சோற்றுக்கு வழியின்றி
வயிற்றோடு சமாதானம்
பேசி முடியாமல்
உள்ளே நடக்கும்
குடல்களின் வேட்டுக்குத்தப்பாது
தவித்துக்கிடப்போர்
கோரஸில் கேட்கிறோம்.

பசி ஆட்கொண்டு
ஆட்களைக் கொல்வது பற்றி
என்ன நினைக்கிறீர்கள்?
அதுபற்றி விடைசொல்ல
அவரால் முடியாது
பசிபற்றி படித்ததில்லை.

சமாதானப் பிரியத்தூதர்களே
இவரி மிருக்கும் படைபலமென்ன?
அத்தனையும் எங்களுக்கு
கடனுக்குத் தரச்சொல்லுங்கள்
வெகு விரைவில் உலகை
சமாதானத்தில் ஆழ்த்துகிறோம்
ஒட்டு மொத்தமாக
யுத்தத்தை நிறுத்துகிறோம்.

எங்களுக்குத் தெரியும்
சமாதானத்திற்கு வழி
எதுவென்று



படிப்பகம்

padippakam

வயிற்றுப்பாட்டுக்கு
வழி பிறந்து
'பசி' யுத்த நிறுத்தம்
கடைப்பிடிக்கப்பட்டால்
பாரிலும்
உடனடி யுத்தநிறுத்தம்தான்
என்பதை அவருக்கு
உரக்கக் கூறுங்கள்!
சமாதனப் பறை
முழங்கிய சப்தத்தில்
காது செவிடாகி இருக்கலாம்.

நாங்களும் தான்
முன்பெல்லாம் சமாதானச்
சங்கு முழங்கினோம்
நல்ல காலம்
இடையில் நிறுத்திக்கொண்டோம்
இல்லாவிட்டால்
எங்களின் செவிப்பாறைகளும்
சேதப்பட்டிருக்கும்.

இப்பொழுதெல்லாம்
நாங்கள் வேண்டுவது
வேட்டொலிதான்
அதுதான்
பசித்திருக்கும் பாலகர்களைத்
தாலாட்டித் தூங்கவைக்கிறது



படிப்பகம்

padippakam

எங்களுக்கு
ஒரு நாளென்ன
ஒரு யுகமானாலும்
போலிச் சமாதானம்
வேண்டவே, வேண்டாம்
உண்மைச் சமாதானம்
ஒரேயடியாக வேண்டும்.

உணர்வு பூர்வமான
ஒற்றைச் சமாதானம்
உண்மையில் ஓங்கும்வரை
உலகெங்குமுள்ள
அனைத்து ஆயுதங்களும்
இயங்கட்டும்.

துருவுக்கு இருக்க
இடமில்லை என்று
தூரத்தில் ஒரு
சத்தம் கேட்கிறது.
அதனால்தான்
இன்று
துருக்கள் பாவமென்று
குருக்கள் ஆயுதங்களில்
இடம் தேடுகிறாரோ?

கவனம் !
பாட்டாளிக் கரங்களுக்கு விலங்கிட
இன்னும்பல விலங்குகள் வரலாம்
விலங்குகள் வந்த வழியே
போய் விடட்டும்.



படிப்பகம்

padippakam

## அவர்களும்
## போராடத் தகுதியுடையவர்கள்
## ஒரு அறிமுகம்

வானத்து
மேகமூட்டங்களை
பூமிக்கு அழைத்துவந்து
பனிக் கூட்டத்துக்கு
மணமுடித்துவிட்டு
அந்தப் பந்தியிலேயே
பட்டினியோடு
சிரித்துக்கொண்டிருக்கும்
மனிதர்களை
உங்களுக்குத் தெரியுமா?

இவர்களின்
இரப்பைகளுக்குள்
முள் மலைகளை வைத்து
தைத்துவிட்டிருக்கிறது அரசு.



படிப்பகம்

padippakam

ஒரு அரசை
வீழ்த்தப்போகிற வீரம்
இல்லை...... இல்லை......
ஒரு
சமத்துவ சாம்ராஜ்யத்தை
சமைக்கும் சக்தி
இவர்களுக்குண்டு.

'அட்டைகள்'
அவர்கள் உறிஞ்சப்படுவதை
உறுதிப்படுத்திக்கொண்டும்
நினைவுறுத்திக்கொண்டும்...

சங்கங்களின்
சின்னச் சின்ன சலுகைகளால்
சின்ன பின்னப்பட்டவர்கள்.

இவர்கள்
போராட்டப் புத்தகத்துக்கு
நிரந்தர சந்தாக்காரர்கள்
சொந்தக்காரர்கள்
என்றும் சொல்லலாம்.

உடல், உப்பு நீரை
மலைகளுக்கு மருந்தாய்
தெளித்த வேகத்தில்
முகவரி அழிந்து
முனகிக் கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

padippakam

1948 லேயே ஜனநாயகத்தின்
வாக்குரிமை நரம்பைக்
கிள்ளியெறிந்தவர்கள்
புள்ளடிக்கு
பொல்லடி கொடுத்தவர்கள்
புரட்சி செய்யக்காத்திருக்கிறார்கள்.

தட்டிப்போகாத
சமுதாய நாற்றங்களை
வெட்டி எறியப் புறப்பட்டவர்கள்.

அந்தப் பிரதேசங்களில்
கருக்கூட்டும் மேகம்
அடிக்கடி கலவர
அமில மழையை இவர்கள் மேல்
பொழிந்து விடுவதுண்டு.

வேலை நிறுத்த விரல்களினால்
அரசாங்க கஜானாவின்
கதவுகளை மட்டுமே
திறந்து பார்த்துப்
பழக்கப்பட்டவர்கள்.

விசேட அதிதிகளாக
வரவேற்கப்படவேண்டியவர்கள்
மூன்று தலைமுறைகளுக்கு முன்...
விசேட அடிமைகளாக
அறிமுகப்படுத்தப்பட்டனர்.



படிப்பகம்

padippakam

கண்களைக் கட்டி
வெள்ளை விரல்கள்
காட்டு வழியாக
கூட்டி வந்தன.

கண்களைக் குத்தி
கறுப்புக் கைகள்
கையொப்பமிட்டு
விலாசங்களை மாற்றின.

இவர்களுக்கு
இப்பொழுதெல்லாம்
கண்கள் தெளிவாகத்
தெரிகின்றனவாம்
வெளியில்தான்
இருட்டு, ஆட்சி நடத்துகிறது.

ஈழத்தின்
எல்லைக்கோடுகளை
இழுத்து - நீட்டிவிட்டவர்கள்.

அதோ,
நமது வம்சம்
மத்திய பகுதியில்
மலைகளையெல்லாம்
நகர்த்துவதைப் பாருங்கள்
ஈழத்து எல்லையாக
பெருஞ் சுவர்கட்டப்போகிறார்களாம்.



படிப்பகம்

padippakam

## எல்லோரும் குணமடைவோம்

என்னை
அச்சடித்து வெளியிட்ட
அம்மாவுக்கு......

நானென்ற
மானுடப் புத்தகத்தை
கோர்த்து செழுமைப்படுத்திய
அப்பாவுக்கு......

மேலும்
குடும்பாழுமன்ற
மந்திரிசபை
உறுப்பினர்களான
அண்ணு, அக்கா,
தம்பி, தங்கை,
அனைவருக்கும்;

முரட்டுத்தனமாக என்னை
முட்டிக்கொண்டு தடுமாறும்
அவளுக்கும் சேர்த்துத்தான்.



படிப்பகம்

padippakam

நான் நலம் என்று
வரைந்து விட்டால்
நம்பி விடுவீர்கள்
ஆனால்... அப்படியில்லை
அவசரப்பட்டு, அலறிவிடாதீர்கள்
சுகமாகிக் கொண்டுவருகிறேன்.

நாமே எழுதி வெளியிட்ட
தேசத்து சோக வரலாற்றின்
இறுதிப் பதிப்பையாவது
திருத்தி எழுதப் புறப்பட்ட
இளைஞர் கூட்டத்துள்
நானும் புதைந்து கொண்டுபோனது
நீங்கள் யாவரும் அறிந்ததே.

1948ஆம் ஆண்டு
ஓ. சி. யில் பெற்றுக்கொண்ட
வரலாற்றுப் புத்தகத்தை
சிவப்பு நிறந்தாலன்றி
பச்சை, நீலங்களால் பதிப்பித்தது
பயனில்லாமல் போய்விட்டது.

இப்புத்தகத்தின்
பகுதி ஒன்றையும், இரண்டையும்,
ஒரே தொகுப்பில்
கோர்த்து விட்டதும்
கீழ்ப்பகுதி, மேல் பகுதியால்
மிதிபட வழியாயிற்று.



படிப்பகம்

padippakam

இன அடக்குமுறை
மிதியல்களின் மேலாக
மிதக்கப்புறப்பட்ட
பல தாய்களின்
புதல்வர்களோடு
நானும் ஐக்கியப்பட்டதும்
அறிந்த விசயம்தான்.

ஆனல் சமூகத்தில்
புரையோடிப்போன
புண்களினூடாக
வெளியான புழுக்களினல்
அவைகளுக்கும் சேர்த்தே.
காடு முகடுகளிலெல்லாம்
நடந்து திரிந்த
என் கால்கள் புண்பட்டிருப்பது
நீங்கள் அறியாததுதான்.

தெரிந்து கொள்ளுங்கள்!
நடக்கமுடியாமல் இருக்கிறேன்
ஏற்கனவே மிதிபட்டு
புண்ணுன உள்ளம்
புரட்சியின் முன்னெடுப்பில்
ஆறிக்கொண்டு வருகிறது
அது போதும் எனக்கு.

நானும் குணமடைவேன்
நாம் நாடும்
நாடும் - குணமடையும்
அப்போது எல்லோரும்
சேர்ந்தே சிரிப்போம்.



படிப்பகம்

padippakam

## நிகழ்காலத்தின் நிர்வாணம்

அவர்களுக்கு
பணம் சம்பாதிப்பது சுலபம்
கஷ்டப்படுவதே இல்லை.

அவர்கள்
அழுவதுகூட
சும்மாதான்.

சில்லறைகள்
சிதறுவதுபோல்
சிரிக்கிறார்கள்......
அதனைக் கண்டு, கண்டு
அவர்களின் சிரிப்பே
சில்லறையாகக் கூர்ப்படைந்திருக்கிறது.

அவர்களுக்கு
எல்லாமே கிடைக்கிறது
கிடைக்கவில்லை
என்பதைத்தவிர!



படிப்பகம்

padippakam

நாங்கள்
கஷ்டப்படுகிறோம்
பணம் தான்
எங்களைச் சேரக் கஷ்டப்படுகிறது;
கஷ்டம் சுலபமாகச் சேர்கிறது.

ஆனால்;
கஷ்டம் சுலபமல்ல.....

நாங்கள்
சிரிப்பதற்குரிய
அங்கத்தையே மறந்தாகிவிட்டது
அவர்களிடம் விசாரிக்கிறோம்
எதனால் சிரிக்கிறீர்கள்?

எங்களுக்கு
எதுவுமே கிடைக்கவில்லை
கிடைக்கவில்லை
என்பதைத்தவிர ...

உழைப்பு நாடகத்தின்
முக்கிய பாத்திரமான
கைகளுக்கு வயதாகிவிட்டது,

வயதுக்கேற்ற அனுபவம்
அதற்கு இருக்கிறது
அதனால்தான்
இன்னும் சமாளிக்கிறது
சாதிக்கத் தவறியிருக்கிறது ...

தவறுகள் திருத்தப்படும்
சாதிப்புகள் சாத்தியப்படும்.



படிப்பகம்

padippakam

அனுபவத்திற்கேற்ற
இளமை அதனிடையில்
ஆனால்
இளமை நெருப்புக்கு
பெற்றோல் ஊற்றும் திறன்
நிறைந்திருக்கிறது.

கண்ணீருக்கு
கடையில் பொருள் வாங்கும்
மதிப்பு இருந்திருந்தால்
எங்களைப் பசி பாதித்திருக்காது
ஆனால்;
பசிப்பாதிப்பு இல்லாவிட்டால்
கண்ணீருக்கு
கஷ்டப்பட்டிருப்போம்.

சுற்றிச் சுற்றி
கஷ்டக் காந்தம் சூழ்வது
ஏழைத்துருக்களைத்தான்
நாங்களும் துருப்புகளாவோம்!
அப்போது
இரும்புப்பெட்டிகளை திறந்து
பணப் பறவைகளுக்கு
சுதந்திர 'சாசனம்' வரையலாம்.

நிகழ்காலத்தின்
நிர்வாணத்தை
நிவர்த்தி செய்ய
சிவப்பு சீலை
நெய்து கொண்டிருக்கிறோம்.



படிப்பகம்

padippakam

## காக்கும் நிலைக்கு உயிராகி......

இருளுமல்லாத - ஒளியுமல்லாத
— அந்தவேளை —

துட்டத் தொழில் புரிந்து
சுருண்ட மனம் கொண்டோர் முன்
வலி தெரியாத,
உடலவஸ்தை புரியாத
நிலையிலே
விடுதலை மேடையிலே—நீ
காக்கும் நிலைக்கு உயிராகி.....



படிப்பகம்

padippakam

நினைவுமல்லாத - கனவுமல்லாத

— ஒருநிலையில் —

ஒருத்தர் முகத்திலும்
முழுமை தெரியாமல்
கண் கலங்காமலும்
அழலாம் என்று
காட்டிக் கொண்டு
உனது மரணத்தில்
நாங்கள் படிக்கிறோம்.

நமக்குள்
விடுதலையுணர்வை
கரைத்துக்கொட்டிக்கொண்டு
புத்திசாலியாய்,
தைரியசாலியாய்,
ஆலோசனை செய்துகொண்டு
சாகலாம் என்று
கற்பித்த ஆசானாய் - நீ

காக்கும் நிலைக்கு உயிராகி......

பிரிவுமல்லாத - இணைவுமல்லாத
— ஒரு பூரணத்தில் —

தெளிவான கண்ணாடிக்குப் பின்னால்
உனது ஒத்திகையைக் காண்கிறோம்.
ஓடி யோடி அந்த ஓடையை மூடுகிறாய்



படிப்பகம்

padippakam

பக்கத்துப் புற்றுக்குப் பின்னல்
ஒழித்து நின்று உற்றுப்பார்க்கிருய்
'வளேவிலேதான் உச்சி தெரியும்'
என்ற உண்மையைச் சொல்கிருய்
கருவிகளேக் கழற்றிப்பூட்டி
கன கச்சிதமாய் நிறுத்துகிருய்
எதிரிகள் புகத்தகுந்த
முனேகளுக்கு முன் சென்று பார்க்கின்ருய்,
பாதுகாப்பு பற்றி
பாடம் நடத்துகிருய்
ஓ..........இன்னும் - நீ

காக்கும் நிலேக்கு உயிராகி......

அசைவுமல்லாத - நிலேயுமல்லாத
— ஒரு இருப்பிலே —

மரணமொன்று
நிச்சயிக்கப்படுகின்றது
மதன் !
நீஅடைந்ததோ
அல்லது உன்னே அடைந்ததோ
மரணமென்று எவரும் மதிப்பிடமுடியாது.
உன்னுயிரை
மக்கள் - மண்
வீரம் - உரிமை
உணர்வு - மானம்
இவற்றை காத்தற்பண்புக்கு
மாற்றீடுசெய்து ஜீவனூட்டி - நீ

காக்கும் நிலேக்கு உயிராகி......



படிப்பகம்

padippakam

## எழுவோம் - எழுவோம்

எழுவோம்... எழுவோம்
பட்டினிப் பாசறைக்குள்
பயிலும் மாணவரினி
இல்லாதொழியும்
இனிய உலகைப்படைக்கும்
பணியில் தூங்கா தெழுவோம்.

வானக்கூரை வேய்ந்த
வையகத்து பெருவீட்டில்
வாழும் மானிடமெல்லாம்
மோதா தொருங்கே நின்று
பேதங்கள் போக்கி நிமிர
அணியணியாய் அயராதெழுவோம்.

துப்பாக்கி உடையணிந்த
அமாவாசை அதிகாரங்கள்
அகிலமெலாம் அசைந்து விழ;
துன்பமெலாம் தூர்ந்துவிட
தொழிலாளர் விசைகூட்டி
பொறிவீசத் துணிந்தெழுவோம்

அவலங்களை எண்ணியெண்ணியே
அழுதுவீங்கிச் சிவந்த விழிகாள்
ஏற்றத் தாழ்வுக் கறைதுடைத்து
வாழ்வெல்லோர்க்கும் சமமென்றாக
இடதுகை ஓங்கிச் சிறையுடைத்து
செங்கொடிநாட்டக் குதித்தெழுவோம்.

எல்லாமும் எல்லார்க்கும்
என்றொரு உயிர்ச்சாசனம்
உலகெங்கும் வரையப்படும்
வலுவான அந்தத்தினம்
நாட்காட்டியில் நடப்படும்வரை
எழுவோம்! போராட எழுவோம்!!



படிப்பகம்

padippakam

## குருதட்சணை

மரங்களுக்கு மானசீகமாய்
அசையும் கலையை
கற்றுக்கொடுத்த காற்று
துரோணர் பாணியில்
வேரையே விரும்பி
குருதட்சணை கேட்டால்...?

ஆத்திரப்பட்ட காற்று
சூரு வளியாய் வேடம்மாறி
சூது செய்யத் தொடங்கினால்
மனஞ்சலிக்காத மரங்கள்
ஏது செய்ய முடியும்?
நாணலாய்த் 'தானும்'
நடிக்கத்தான் வேணும்.

மரங்களில் நின்ற குயில்கள்
அநியாயத்தைக் கேட்கச்சொல்லி
எழுப்பிய அபயக்குரலை
ஆகா..... அழகான பாடலென்று
பாராட்டிவிட்டுப் போகட்டும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
வித்தையைக் கூட
கற்றுக்கொள்ள வேண்டுமா?

துரோணர்கள் எப்போதும்
அப்படியே இருந்தாலும்
இன்றைய ஏகலைவன்கள்
எப்படியோ மாறித்தான் விட்டார்கள்



படிப்பகம்

padippakam

## ஏக்கம்

எமதருமைக் கல்விக் கூடங்களே
சொன்னால் நம்பமாட்டீர்கள்!
உங்கள் கருவறைக்குள்!
களித்திருந்த காலங்களில்
எங்கள் முகங்களிலெல்லாம்
ஒட்டப்பட்டிருந்த சந்தோச முகமூடிகள்
கிழித்து வீசப்பட்டன!
இப்போது எஞ்சி இருப்பதெல்லாம்
எதிர்பார்ப்புச் சுவர்களில் வரையப்பட்ட
ஏமாற்றமெனும் கேலிச்சித்திரங்கள்மட்டுமே!

அக்கறை காண்பித்த ஆசிரியர்களே!
நீங்கள் அச்சடித்த
வினாத்தாள்களில் இருந்த கேள்விக்குறிகள்
எப்படி எங்கள் முகங்களில்
எட்டிவந்து ஒட்டிக்கொண்டன?
முக்காலமும் உணரும் முனிவர்களே!
உங்களுக்குத் தெரியுமா?
ஈழத்து இளைஞர்களின்
எதிர்காலம் என்னவென்று?



படிப்பகம்

padippakam

# வள்ளல்களைத் தேடிய பூதம்

மகவைப் பெற்றெடுத்த
மகளிரின் நிலை போலே
மாறுதலுடைய ஆரம்பம்
மகத்தான மகிழ்ச்சிதான்.

மாறுதலில் நிரந்தரம்
மருந்துக்கும் இல்லையென்றால்
மகிழ்ச்சியின் தகனக்கிரியை
மனக்கிடங்கில் நிறைவேறும்.

இதுவரை காலமும்
எதனைத் தேடினோம்?
புதையலைத் தேடலையே
பூதமேன் வருகிறது?
தேடித்தேடிப் போராடினோம்
வாழ்க்கையைத் தேடலாக்கி
போராடலை வாழ்க்கையாக்கி
சமுதாய மாற்மொன்றை
தேடித்தேடிப் போராடினோம் - இன்று
சமுதாயத்தையே தேடி நிற்கிறோம்.

என்றாலும் ஈழவர்கள்
இணையற்ற வள்ளல்கள்
பக்கத்து பார்வையாளர்களின்
பாதுகாப்புப் பசிதீர்க்க
போராட்டத் தேரையே
புசிக்கக் கொடுத்தவர்கள்.

பூக்கள் தரையுதிர்ந்து
மிதிபட்டு நோகலாம்;
நியூற்றனுக்கு நியாயம்
நினைவில்லாமல் ஆகலாம்;
புவியீர்ப்பு சக்திக்கு புதியவார்ப்புகள்
புரியாமலா போகும்? ?



படிப்பகம்

padippakam

## அந்த மலர்வில் நாமும்......

ராணி - நீ
என் இதயப்பாதையில்
உன் பூப்பாதங்களால்
நடந்து...நடந்து...
ஏற்பட்ட தடத்தில் இப்போதெல்லாம்
புரட்சிப்'புல்' முளைத்திருக்கிறது.

அது அண்மைக்காலமாக
நீ நடக்காமையால்
விளைந்த வினையல்ல...
தடத்தின் மேலால்
'ஈரோஸ்' வானம் பெய்த
கடும் கருத்து 'மழையினுல்'
குருத்துவிட்ட செழிப்பு.

மழையின் வேகத்துக்கு
உன் பாதங்களால்
ஈடுகொடுக்க முடியாது
ஆனுல் நான் உன்னிடம்
ஈடுவைத்த இதயத்தை
மீட்கும் மூலதனம் இன்னுமில்லை
என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

எப்போதாவது
திருமணத்தில் தானே
நாம் இணையப்போகிருேம்
அது ஈழமலர்வின்
மணத்தில் இருக்கட்டுமே



படிப்பகம்

padippakam

## சரிபார்க்க வாருங்கள்

என்
தாய் தந்தையரே!
மனைவி பிள்ளைகளே!
உடன் பிறப்புகளே, உறவினரே!
அழுங்கள்
அழுதழுது அழுகிப் போங்கள்
நான் கவலை கொள்ளவில்லை
எனக்குத் தெரியும்
கண்ணீருக்குக் காரணம் கவலை
கவலைக்குக் காரணம்?
ஏக்கம், சுகம் கிடைக்காத தாக்கம்
எனவே



படிப்பகம்

padippakam

நான் கவலை கொள்ளவில்லை
ஆனால்; இன்று
சினேகிதத்தோடு நேசிக்கின்ற
தேசமே அழுகிறதே
இதைத்தான்
என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை

ஒப்பந்த ஓடம்
இந்த தேசத்தின்
கண்ணீர் வெள்ளத்தில்
பவனிவரும் போதெல்லாம்
துடுப்பைத் தொலைத்துவிட்டு
காற்றுக்கு கரைசேருமென்று
கனவு காண்பவர்களுக்கு
கரிசனையோடு சொல்கிறேன்
துடுப்புத்தொட்டுக்கொண்டிருப்பது
எங்கள் பூமியைத்தான்.

எமது ஈர இதயங்களில்
பாய்ச்சப்பட்ட ஈட்டிகளை
இழுத்த வேகத்துடனேயே
வெளியே வாருங்கள்
ஓ.........
ஈழத்துச் சொந்தக்காரர்களே!
அந்த ஈட்டிகளைக்கொண்டே
யூலையில் வரையப்பட்ட
ஒப்பந்த ஓலையிலே உள்ள
சரத்துக்களை ஒரு தடவை
சரிபார்த்துவிட்டு வருவோம்.



படிப்பகம்

padippakam

## வாழை பாடையாகி

நான் உயிரோடு
உன் மீது சாய்ந்தபோது
சறுக்கவைத்த சண்டாளா
செத்த பின்பு என்னைத்தாங்கி
என்ன பயன் கண்டாய்?



படிப்பகம்

padippakam

## இலட்சியம் வீழாது......

இன்னும் தொடர்ந்து வாழ.
இன்னுயிர் இழந்த தோழா
மனோகரா!

உன் மன ராகத்தை;
விடுதலைத்தாகத்தை
செயல் வேகத்தை
இலட்சிய இலக்கை
உறுதியின் உரத்தை
ஈழவர் அறிவர்...
தோழர் அறிவர்...
அறியுமோ?
அந்நியன் தோளில்
தொங்கும் துப்பாக்கி



படிப்பகம்

padippakam

இன அடக்கு முறைக்கு
ஈனச் சுரண்டலுக்கு
எதிராய் எழுந்த
உன் உடல் வீழலாம்
கொதித்த குருதி சிந்தலாம் - நீ
பதித்த சிந்தனை
விதைத்த வீரம்
விண்ணை விஞ்சும்
அந்த இலட்சியம் வீழாது!
நிச்சயமாய் வீழவே வீழாது!

செத்தும் சிரித்த
உன் முகமும்
குண்டுகள் பாய்ந்து
விரித்த அகமும்
எமக்கு அந்திம
வேதனை தந்ததடா
எதேச்சாதிகாரிகளின்
எச்சில் நாய்களுக்கு
மிலேச்சத்தனத்தின்
மிருக வெறியர்க்கு
எமது ஈழப்பிரதேசத்தை
விட்டு விரண்டோடும்
காலம் வெகுதூரத்திலில்லை
என்ற நம்பிக்கை
போதனை தந்ததடா

உனது பிரிவால்
வெதும்பிச் சஞ்சலித்து - நீ
விட்டுச்சென்ற
விடுதலை ''விருட்சத்தை''
நோக்கிச் செல்லும்
பயணத்தைத்தொடர
வீறு கொண்டெழுகிறோம்.



படிப்பகம்

padippakam

## நிச்சயம் ஒரு நாள்

எல்லோரின் வாழ்வுக்காகவும்
மனிதனாய் போராடி...
தனக்காக வாழ்வதைத்
தவிர்த்துக்கொண்ட தோழனே!

இன்று
அந்த எல்லோரும்
நீ
வாழ்வை இழந்ததாய்
வருத்தப்பட்டுக்கொள்கிறார்கள்.

ஈழப் போராட்டத்தில்
உனது பங்களிப்பு
ஓய்ந்து விட்டதென்று
எவராவது எண்ணினால்
ஏமாந்து விடுவார்கள்.

உன்னைத் துளைத்த
துப்பாக்கி வேட்டின்
அழுத்த விசை - உன்னை
விழுத்த மட்டுமல்ல
ஈழப் புரட்சியை முன்னோக்கி
இழுக்கவும் கூட...



படிப்பகம்

padippakam

உன்னை
இன்னும் தோழர்களை
மக்களின் மகத்தான உயிர்களை
உடமைகளை
ஈழத்துக கன்னி மரங்களின்
கற்புப் பட்டைகளை
இழந்து தவிக்கும்
நாட்கள் தொடர்கின்றன.

ஆனல்
இழப்பதனுல் எக்களித்து
எகிறிக் குதித்து
கோஷமிட்டுக் கொண்டாடவும்
ஒரு நாள்
இருக்கிறது என்பதை
நிச்சயம் நம்புகிறோம்.

அடிமை விலங்கை
அடியோடு இழந்த
அந்த நாளில்
இழப்புக்கள் என்பதையே
மொத்தமாக
இழந்து விட்டிருப்போம்!

ஆம்!
தோல்விகளையே
தோற்க வைத்த எமது தோழனே!
இழத்தல்களை எல்லாம்
இழப்பதற்கு ஒருநாள்
நிச்சயிக்கப்படும்.



படிப்பகம்

padippakam

## நீயுமா புரூட்டஸ்?

இங்கே
சுற்றிவர
ஆறுகள் பாய்ந்ததென்ன ?
ஈரத்தைத்தான்
எங்கேயும்
காணவில்லை!

எல்லாமே
அதிக விலையேற்றமென்று
யார் சொன்னார்கள் ?
மரணம் - இங்கே
மலிவாகிப் போனதே.

வெள்ளைப் புருவொன்று
கொள்ளையடிக்கப்பட்டதாம்.

இந்தப் புருவின்
விலாசம்
மக்கள் மனங்களில்
விதைக்கப் பட்டுக் கிடக்கிறது.

எந்த வலைக்குள்ளும்
சிக்காத புரு
"வேடன் அம்புக்கு"
விலகாதது ஏனோ ?

சுயநலத்தின்
சுயம்வரத்துக்காய்
வில்லே தான்
வில்லை வளைத்ததா ?



படிப்பகம்

padippakam

நேசத்துக்கும்
தேசத்துக்கும்
பாலம் போட்ட
மனிதாபிமானமொன்றை
மடியவைத்த
'முகத்துக்கு' - அந்த
துப்பாக்கியே
எச்சிலைத் துப்பும்.
பிரிந்த உயிர்

பிதாவினுடையதாக இருக்கலாம்
ஆனல்
உயிர்த் தெழுவது
மக்கள் சக்தி தான்.

பிதாவின்
பிரிந்த உயிர்
ஊதிய சங்கில்
சாம்பல் சாம்ராஜ்யங்கள்
சரிந்து வீழலாம்

ஒளி குறைந்த
விடுதலை மேடையில்
நடந்த நாடகங்களில்
"நீயுமா புருட்டஸ்'
கேள்வி
நிலைத்து நிற்குமா ?

மட்டக்களப்பு மாவட்ட பிரசைகள்குழுத் தலைவர் வண. பிதா. சந்திரா பெர்ணண்டோ துப்பாக்கி ஏந்தியோரால் சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து 06.06.88 அன்று வடித்த வரிகள்.



படிப்பகம்

padippakam



இவன் படைப்புகள் உணர்ச்சிகளின் வெளிப்பாடு.
கற்பனையில் கண்ட கோபம், சோகம், வீரம், அன்பு
என்ற உணர்ச்சிகளுக்கு செயற்கை மை பூசிப்
போலியான வார்த்தை ஜாலம் காட்டும்
புலம்பல்கள் அல்ல இவை.
எங்கள் காலத்தின் கண்ணாடி என்ற பெயரைப்
பெறும் படைப்புகளை விரல்களுக்கிடையில்
துடிக்கும் இவன் எழுதுகோல் பிரசவித்துள்ளது.
இவனது முகம் பலருக்கு அறிமுகம்.
இவனது விகாசம் பரந்த மனத்தின் விசாலத்தைக்
காட்டும்.
செங்கலடி, குடியிருப்பு எல்லைக்குள் அமைந்த
ஏறாவூரில் குடியிருப்பவன்.
செய்யத்தாவூத் பசீர் உசேன் என்ற இயற்பெயரில்
ஊருக்குத் தெரிந்தவன்.
பசீர் மாஸ்டர் என்ற பெயரில் ஆசிரியப் பணியாற்ற
சிறார்களின் கல்விக் கண்ணைத் திறந்து
புதுமையிலே பூமிக்கு வரவைக்கவும் சோர்வின்றி
உழைக்கும் உள்ளத்திற்கு சொந்தக்காரன்
ஊழியர் மனங்களுக்கு நெருக்கமான இவன்
மனத்தில் ஒருத்தி அண்மையில் இடம் பிடித்து
இவனது செயல்பாடுகளுக்கு மெருகூட்டியுள்ளாள்.

PM 014

படிப்பகம்